

சென்னை கிழக்குமாவட்டம் எழும்பூர் வடக்குப் பகுதி 99 வது வட்ட திடீர்நகர் பாகம்1 பாகமுகவர் (BLA2) மறைந்த பொ. தட்சிணாமூர்த்தி அவர்களின் 16 ஆம் நாள் நினைவுநாளில் அவருடைய திருவுருவ படத்திற்கு அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு மலர்மாலை அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். நிகழ்வில் மேயர் பிரியாராஜன், பகுதிசெயலாளர் சொ.வேலு, வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன், பரிதிஇளம்சுருதி,மற்றும் கழக நிர்வாகிகள் BLA2 பாகமுகவர்கள் முன்னாள் நிர்வாகிகள் கழகத்தோழர்கள் கலந்துகொண்டு நினைவு அஞ்சலி செலுத்தினர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




### மண் காக்க, மக்கள் மானம் காக்க உயிர் நீத்த

# தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

**சென்னை, ஆக. 4-**

**மண் காக்க, மக்கள் மானம் காக்க உயர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



ஓடாநிலையில் கோட்டைக் கட்டி ஆண்டு தன் வீரத்தாலும் தியாகத்தாலும் கோடானு கோடி மக்கள் மனதில் நிலைத்திருக்கும் மாவீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் இன்று.


அடிமைத்தனமே தோல்விக்கான தொடக்கப்புள்ளி என ஆதிக்கத்துக்கு அடிபணிய மறுத்து அந்நிய படையை விரட்டியடித்த தன்னிகரில்லா வீரத்துக்குச் சொந்தக்காரர்.

மண் காக்க, மக்கள் மானம் காக்க போரிட்டு உயிர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்.

அவர் வழியில் தமிழ் மண்ணில் ஆதிக்கத்தை அடிமைத்தனத்தை வீழ்த்துவோம்!

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கலைஞர் போல் யாருண்டு?



செங்கோல் ஒரு கையில்
எழுதுகோல் ஒரு கையில்
ஏந்தியே சனாதனம் எதிர்த்திருப்பார்

அரியணை அமர்ந்தாலும்
எதிரணி அமர்ந்தாலும்
தன்மானம் தொலைக்காமல்
துணிந்திருப்பார்

கவி அரங்கம் என்றாலும்
புவி அரங்கம் என்றாலும்
காவியைப் பல காதம் ஓடவைப்பார்

கோட்டையில் இருந்தாலும்
கோபாலபுரம் இருந்தாலும்
காட்சிக்கு எளியனாய் மகிழ வைப்பார்

தொண்டர்கள் வந்தனையோ
எதிரிகள் நிந்தனையோ
எல்லோர்க்கும் அன்பையே
அள்ளிவைப்பார்

உள்நாடு என்றாலும்
வெளிநாடு சென்றாலும்
செம்மொழித் தமிழுக்கே உயர்வளிப்பார்

நண்பர்கள் ஒருபக்கம்
துரோகிகள் மறுபக்கம்
இருந்தாலும் கலங்காமல் செயல் புரிவார்

பூமாலை தோளிலே
முள்கிரீடம் தலையிலே
சுமந்தாலும் ஓய்வின்றி உழைத்திருப்பார்

புகழ்மொழி கேட்டாலும்
இகழ்மொழி கேட்டாலும்
எல்லாமே சமமாக உணர்ந்திருப்பார்

வெற்றிகள் பெற்றாலும்
தோல்விகள் பெற்றாலும்
எப்போதும்வானம்போல்உயர்ந்திருப்பார்

கலைஞர் போல் யாருண்டு?
கலைஞர் வாழ்வார் பல நூற்றாண்டு!!!



**ஆண்டாள் பிரியதர்ஷினி**

### கூரை சூர்ய மின்சக்தி நிறுவனத் திட்டத்தை

# தமிழ்நாட்டில் நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



*புதுடெல்லி, ஆக. 4-*

பிரதமரின் கூரை சூர்ய மின்சக்தி நிறுவனத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) பிரதான் மந்திரிசூர்யகர் முஃப்த் பிஜிலி யோஜனா (PMSGMBY) திட்டத்தின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம், மாவட்ட வாரியாக, தமிழ்நாட்டில் முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் கூரை சூரிய மின்சக்தி நிறுவல்களின் எண்ணிக்கை எவ்வளவு?(ஆ)தமிழ்நாட்டில் மேற்கூறிய திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்குப் பொருந்தக்கூடிய ஊட்டக் கட்டணம் மற்றும்அதுநிகரஅளவீடுஅல்லது மொத்தஅளவீட்டுமாதிரிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்,

(இ) டிஸ்காம் ஒப்புதல்களில் தாமதம், விற்பனையாளர் கிடைப்பதில் பற்றாக்குறை அல்லது விழிப்புணர்வு இடைவெளிகள் போன்ற தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்ட ஏதேனும் செயல்படுத்தல் சவால்கள் அல்லது தடைகளை அரசாங்கம் கண்டறிந்துள்ளதா?

(ஈ)அப்படியானால்,தமிழ்நாட்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீடுகளில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதை விரைவு படுத்தவும், திறம்படசெயல்படுத்துவதை உறுதிசெய்யவும்அரசுஎடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

(உ)தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை சரியான நேரத்தில்செயல்படுத்துவதைஉறுதி செய்வதற்கு அரசு எடுத்து வரும்நடவடிக்கைகள்,பயன்பாட்டின் எளிமை, மின் இணைப்பு மற்றும் பொது விழிப்புணர்வுபிரச்சாரங்கள் உட்பட என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய எரிசக்தித் துறை இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் அவசரக் கூட்டம் நாளை (05.08.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில், பல்லாவரம் பழைய டிரங்க் சாலையில் அமைக்கப்பட்டுள்ள விழா பந்தலில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., டி.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** மாவட்ட அரசு மருத்துவமனை திறந்திட, வீட்டு மனை பட்டாக்கள் வழங்கிட கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் (09.08.2025) அன்று நம்முடைய மாவட்டத்திற்கு வருகை குறித்தும்,

சென்னையில் (07.08.2025) அன்று காலை நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணியில் பங்கேற்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
**செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமரி மணிமாறன்
### ஆகஸ்ட் 4 (2021)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளை போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்குப் பகுதி 48வது வட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர்– துணை முதல்வர் அறிவுறுத்தலின்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்மாகை வட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலையில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்திஇ 15 –வது பாகத்தில் வீடு வீடாகச் சனெ்று படிவத்தை பூர்த்தி செய்தார். இதில் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் இரா. பாலன், மாவட்ட பிரதிநிதி இரா. பொன்முடி, என்.ஹையத்பாஷா, டிபன் ஆர். செல்வம், டி.பாரதி, ஜி.கணேசன், ஏ.சுப்பிரமணி, வி.எஸ். ஆர்.ராம்குமார், வி.ஹரி, கிருஷ்ணன், மாலை கடை வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



'உங்களுடன் ஸ்டாலின்' நிகழ்ச்சி (ஆகஸ்ட் 6ஆம் தேதி) மதுரவால் சட்டமன்றத் தொகுதி மண்டலம் 11. போரூர் 153 வது வார்டில் பி.ஜெ.என். மஹாலில் நடைபெற இருக்கிறது. அதனை முன்னிட்டு 153 வது வார்டில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் நேரடியாக மாமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ராமலிங்கம் மற்றும் தன்னார்வலர்கள் இல்லம் தோறும் சென்று "உங்களுடன் ஸ்டாலின்" என்கிற மகத்தான திட்டத்தை பொதுமக்களுக்கு சுற்றறிக்கை நோட்டீஸ் வழங்கினார்.

### 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்திற்கு

# மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் வரவேற்பு!

### மாநில துணைப் பொதுச் செயலாளர் அ.ரகமத்துல்லா அறிக்கை!

சென்னை ஆக. 04

மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் அ.ரகமத்துல்லா 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:–

இன்று தமிழ்நாடு முழுவதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் திராவிட மாடல் அரசு.

எல்லார்க்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்துடன், மக்கள் நல்வாழ்வுத் துறையில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி இந்தியாவில் மிகச்சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறது.

மக்களைத் தேடி மருத்துவம் (2 கோடி பயனாளிகள்) மற்றும் நம்மைக் காக்கும் 48 திட்டங்களைத் தொடர்ந்து, மருத்துவ சேவைகளை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்க்க புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறது. ஆகஸ்ட் 2, 2025 முதல் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்படும் சேவைகள், இலவச கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் மருத்துவ சேவைகள், பொது மருத்துவ நிபுணர் அறிவுறுத்தலின்படி எக்ஸ்ரே, எக்கோ கார்டியோகிராம், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் உள்ளிட்ட இந்த பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்படு கிறது.

சென்னையில் 15 மண்டலங்கள் உள்பட தமிழகம் முழுவதும் மொத்தம் 1,256 இடங்களில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்கள் நடைபெறுகின்றது.

முகாமில் பெயர் பதிவு செய்பவர், பிற்காலங்களில் தமிழகத்தில் வேறு எந்த மருத்துவமனைக்கு சென்றாலும், அவரது உடல்நல விவரங்களைக் கண்டறியும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. நோய் வராமல் தடுக்க உணவு விழிப்புணர்வு அறிவுரைகள் வழங்கப்படும். முகாம்களில் உயர்சிறப்பு மருத்துவ நிபுணர்களும், 5 வகையான இந்திய மருத்துவ முறை நிபுணர்களும் இடம் பெறுவர்.

மற்ற துறைகளும் இந்த முகாமில் பங்கேற்பதால், மருத்துவக் காப்பீட்டு வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல் போன்ற கூடுதல் வசதிகளும் முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டு நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை செயல்படுத்திய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் உயர் அலுவலர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.